


▲ அண்ணா பல்கலைக்கழகத்தின் விளையாட்டுத் துறை மண்டலம் 4-ன் சார்பாக நடைபெற்ற வருடாந்திர விளையாட்டு போட்டியில் ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் பட்டத்தை சென்னை மேற்கு தாம்பரத்தில் உள்ள ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி தொடர்ந்து 7-வது முறையாக கைப்பற்றி சாதனை படைத்துள்ளது. வெற்றி பெற்ற அந்த அணிக்கு அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் எம்.கே.சுரப்பா விருதினை வழங்க அதனை கல்லூரியின் முதன்மை செயல் அதிகாரி சாய் பிரகாஷ் லியோமுத்து மற்றும் மாணவ, மாணவியர் பெற்றுக்கொண்டனர். நிகழ்ச்சியில் பல்கலைக்கழக பதிவாளர் எஸ்.கணேசன், கூடுதல் பதிவாளர் எஸ்.செல்லதுரை, டீன் டி.வி.கீதா மற்றும் கல்லூரியின் முதல்வர் சி.வி.ஜெயக்குமார், விளையாட்டுத்துறை இயக்குநர் பி.கே.குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.